அறப்போரில் தி. மு. கழகம் பங்கு

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணு இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆடிமீ 12உ செவ்வாய் (27—7—54) வெளியூர்: ஆடிமீ 13உ புதன் (28—7—54)	மலர்: 2 இதழ்: 37

திரு—கொச்சி தமிழர் அறப்போர்!

நிலையை விளக்கி தோழர் ஜான் அறிக்கை

அடக்குமுறைக்குக் கண்டனம்

அறப்போர் வெற்றி பெறும் என்ற உறுதிமொழி

"திரு—கொச்சியில் உள்ள தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செய்யாற்றின்கரை, செங்கோட்டை, தேவிகுளம், பீருமேடு, சித்தூர் முதலிய தாலுக்காக்களில் 15 இலட்சம் தமிழர் வாழ்கின்றனர். இந்த 9 தாலுக்காக்களும் ஏறத்தாழ 2000 சதுரமைல் பரப்புடையது. நீர்வளம், நிலவளம் மிக்கதோர் நிலையமாம். இதில் தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செய்யாற்றின் கரை பகுதிகள், நெல் விளையும் பெரும் பகுதி நிலங்கள் ஆதலின், நாஞ்சில் நாடு என அழைக்கப்படுகிறது. பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்பவர். மேலும் குடிசைத் தொழில்களான, நெசவு கொல்லவேலை முதலியன பரம்பரை பரம்பரையாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவிகுளம், பீருமேடு முதலிய இடங்களில் ரப்பர், நல்ல மிளகு, காப்பி, தேயிலை போன்ற கிருஷிகள் நடைபெறுகின்றன. நல்லதோர் வருவாய் உள்ள இடங்கள்.

மேலும் இப்பகுதிகளில், ஏறத்தாழ 20 உயர்நிலைப் பள்ளிகளும், நாகர்கோவிலில் மட்டும் இரண்டு கல்லூரிகளும் இருக்கின்றன. இங்குள்ள மக்களில் பெரும்பான்மையோர் அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளையும், அதன் விளைவுகளையும் நன்றாய் அறிந்தவர்கள்,

தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டுமென்ற கிளர்ச்சி கடந்த ஏழு ஆண்டுகளாக இங்கு நடைபெற்றுவருகிறது. கடந்த மூன்று பொதுத் தேர்தல்களின் முடிவும் இதையே நன்கு எடுத்துக் காட்டின. முதல் தேர்தலில், தமிழ் பகுதியினின்றும் 14 அங்கத்தினர்களும், இரண்டாவது தேர்தலில் 9 அங்கத்தினர்களும் மூன்றாவது தேர்தலில் 12 அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்

திரு-கொச்சி சட்ட சபை: கட்சிகளின் பலம்

காங்கிரஸ்	44
ஐக்கிய முன்னணி	38
பி—சோ—கட்சி	19
தி. த. நா. காங்கிரஸ்	12
சுயேச்சை	5

"இந்தச் செயல் மலையாள ஆதிக்கவாதிகளுக்குப் பிடிக்காத காரணத்தால், இந்தத் தமிழர்களின் எழுச்சியை அடக்க வேண்டுமென்று கங்கணங் கட்டிய, காங்கிரஸ் கட்சி 19 பேர் கொண்ட பி—சோ—கட்சிக்கு முட்டுக் கொடுத்து, கோலேக் கோலாட்சி புரிந்து வருகிறது

திரு—கொச்சி தமிழக, மக்கள் சபை அங்கத்தினர்களான தோழர்கள் ஏ. நேசமணி எம். பி., ஏ. ஏ. ரசாக் எம். பி., இவர்கள் டில்லி பாராளுமன்றத்தில் கொடுத்த மகஜர்களுக்குச் செவி சாய்க்காமலிருந்து, திரு—கொச்சி தமிழ் மக்களை மதிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை.

உரிமைக்காக வாதாடும் மக்களைப் பார்த்து 'நான்சென்ஸ்', 'முட்டாள்கள்' என முழங்கும் நேரு, தேர்தலிலே தன்னை மண்ணைக் கவ்வச்செய்த திரு-தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களையும், திரு-கொச்சி வாழ்கின்ற 15 இலட்சம் தமிழர்களையும், காங்கிரஸ் வளர்ப்புப் பிள்ளையான பி.—சோ. கட்சியின் ஆட்சியில் பழிவாங்கத் திட்டமிட்டு, தேவிகுளத்தில் தமிழர்களின் மேல் போர் தொடுத்திருக்கிறார்கள்.

திரு-கொச்சி தமிழகத்தில் தமிழர்கள் நிம்மதியாக வாழ வழியில்லை. மலையாளத் தோழர்கள் தமிழர்களை கையாண்டி செய்வதும், மலையாள அதிகாரிகள் தமிழர்களை அதட்டுவதும், அடிப்பதும் இங்கு அன்றாட நிகழ்ச்சியாய் விட்டது. திரு-கொச்சி தமிழகத்தில், மலையாளப் போலீசு செய்யும் காட்டாட்சி தர்பார் பொறுக்கக் கூடியதல்ல தேவிகுளத்தில் இந்த சர்க்கார் செய்த செயல் என்னவென்று அறியச் சென்ற தி. த. நா. காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து, அங்கு 144 அமுலில் நடத்தியிருக்கிறது.

கடந்த ஜூன் 28-ம் தேதி முதல் தடையுத்தரவு அமுலில் இருக்கிறது. இது தகாதது என்று சுட்டிக்காட்ட அறப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தடை மீறுகிறார்கள். தமிழகத்தில் கடையடைப்பும், ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் அமைதியான முறையில் நடைபெறுகின்றன. என்ற போதிலும் திரு—கொச்சி சர்க்காரும், மத்திய சர்க்காரும் கேளாக் காதினராகவே இருக்கின்றனர். இந்த நிலைமை நீடித்தால் ஆந்திராவில் நடந்த கொந்தளிப்பு திரு—தமிழகத்திலும் நடைபெறும் என நம்புகிறோம்.

இங்குள்ள அடக்குமுறை

தேவிகுளம், பீருமேடு இப்பகுதிகளில் வாழ்பவரில் பெரும்பான்மையோர் தோட்டத் தொழிலாளர்கள். இங்கு இரண்டு தொழிற் சங்கங்கள் தொழிலாளர் மத்தியில் பணியாற்றி வருகின்றன. ஒன்று தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் யூனியன், திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் ஆதரவு பெற்றதும், 10,000 அங்கத்தினர்களைக் கொண்டதும், பதிவு செய்யப்பட்டதும் ஆகும். இதற்கெதிராக ஹைரேஞ்ச் யூனியன் பணியாற்றி வருகிறது. இதற்குச் சமஸ்தான காங்கிரஸ் ஆதரவு தருகிறது; பதிவும் செய்யப்படாதது. இவ்விரண்டு தொழிற் சங்கத்திற்கும் தகராறு என்று சொல்லி அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்குள்ள தமிழர்களை அடக்கி ஒடுக்குகிறது. இப்படிப்பட்ட அடக்குமுறைக்குப் பலியான ஒரு பெண் தொழிலாளி இறந்தாள். இதைப் பொதுக் கூட்டம் கூட்டிக் கண்டித்தபோது குப்புசாமி முதலிய தோழர்கள் கையப் புடைக்கப் பட்டனர். மேலும் இந்த அராஜகச் செயலைச் செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மலையாள முதலாளிகளாலும், தொழிலாளிகளாலும் பாராட்டப்பட்டிருக்கிறார். இவ்விவரத்தை அறியச் சென்ற தி. த. நா. கா. தலைவர்களான, ஏ. நேசமணி, ஏ. ஏ. ரசாக், மாஜி மந்திரி ஏ. சிதம்பரநாதன் எம். எல் ஏ. முதலியவர்கள் மூணாறில் கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திரு—தமிழக மக்கள் அத்தடையுத்தரவை மீறுகின்றனர்; கைது செய்யப்படுகின்றனர். இதுவரை ஏறத்தாழ 600 பேர் கைதாகியிருக்கின்றனர்.

"23—7—'54 முதல் நாகர் கோவிலில் கோர்ட்டில் மறியல் நடைபெற்று வருகிறது. மறியல் செய்கின்ற தோழர்கள் கைது செய்யப்படுகின்றனர்—இது எதற்கெனில் கோர்ட்டு நடவடிக்கைகள் தமிழில் நடத்தப்பட வேண்டுமென்பதற்காகவே யாகும்.

கட்சிகளின் ஆதரவு

கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைமை :- அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு கமிட்டியின் சார்பில் வந்து, அவர்களது கருத்தை திரு—தமிழக மக்களுக்குத் தெரிவித்த தோழர் ப. ஜீவானந்தம், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 21—7—'54ல் நடந்த கூட்டத்தில், பின்வருமாறு கூறினார். 'இன்று திரு—கொச்சித் தமிழகம், தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்ற இந்தக் கிளர்ச்சியை கம்யூனிஸ்டு கட்சி முழுக்க முழுக்க ஆதரிக்க மட்டும் வரவில்லை-அக்கிளர்ச்சியை முன்னின்று நடத்த வந்திருக்கிறது. இக்கிளர்ச்சியை யார் தலைமிட்டாலும் வெற்றிவரை போராடுவதென்று நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும். இது தமிழர்கள் அனைவருடைய பொதுப் பிரச்னையாதலால் நாம் அனைவரும் கட்சி வேறுபாடின்றி; திரு-தமிழ் நாடு காங்கிரசின் போர்க் கொடியின்கீழ் நின்று போராட வேண்டும். இதற்கான சகல முயற்சிகளையும் திரு-தமிழ் நாடு காங்கிரஸ் செய்ய வேண்டும்.

தமிழரசுக் கழகத்தின் நிலைமை : தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. தங்கள் கழகக் கருத்தை, 23-7-54-ல் நாகர்கோவிலில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் எடுத்துக் கூறினார். 'ஐக்கியத் தமிழகம் அமைக்க வேண்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

அறப்போரில் என்.எஸ்.கே.!

திருவனந்தபுரம், ஜூலை 26—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் அறப்போரில் கலந்து கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

நேற்றிரவு நாகர் கோவிலில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் மேற்படி முடிவு தெரிவிக்கப்பட்டது.

நிலைமை அறிய — திட்டம் வகுக்க

அண்ணாதுரை, மதியழகன் நாகர்கோயில் பயணம்

திரு—கொச்சி தமிழர் கிளர்ச்சியில் புதிய கட்டம்

திரு—கொச்சியில் தமிழர்கள் நடத்திவரும் அறப்போர், புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது.

அடக்குமுறைப் போக்கை எதிர்த்து துவக்கப்பட்ட அறப்போர், தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைக்கப்பட்டாக வேண்டும் என்ற மூலாதாரப் பிரச்னையை முன்னணிக்குக் கொண்டு வந்து விட்டது.

அடக்குமுறையைத் துச்சமென்று எண்ணி அஞ்சா நெஞ்சுடன் அறப்போரில் ஈடுபடத் தமிழர்கள் வீறுகொண்டெழுந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் சிறையிலே தள்ளப்பட்டனர் — ஆர்வம் இதனால் கொழுந்துவிட்டெரிகிறது — ஆயிரக்கணக்கிலே தொண்டர்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

அடக்குமுறையை நம்பி வாழும் பட்டம் சர்க்காரின் போக்கை எல்லா கட்சியினரும் பலமாகக் கண்டிக்கின்றனர்.

தடை உத்தரவை மீறுவது என்ற போர்முறை இன்று, 'கோர்ட் பகிஷ்காரம்' என்ற வகையிலே உருவெடுத்திருக்கிறது.

எல்லா முற்போக்குக் கட்சியினரும், பொதுக் கூட்டங்கள் நடத்தியும், கட்சி ஊழியர்கள் கூட்டம் நடத்தியும் அறப்போருக்கான எழுச்சி வளர வழிகண்டு வருகிறார்கள்.

தி. மு. கழகம் பொதுக் கூட்டங்கள் நடத்தி, அறப்போரை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

நேரடியாகவே அறப்போரில் ஈடுபட, தி. மு. க. தயாராகிக்கொண்டு வருகிறது.

அறப்போர் நிலைமையை விளக்கியும், அங்கு உள்ள தி. மு. கழக தோழர்களின் ஆர்வத்தை எடுத்துக் காட்டியும், நாஞ்சில் நாட்டு தி. மு. கழக செயலாளர் தோழர் ஜான் அவர்கள், தலைமைக் கழகத்துக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். (பிறிதோரிடத்தில் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.)

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நிலைமையை அறிந்துவரவும், தி. மு. கழகத் தோழர்கள் அறப்போரில் எவ்வகையில் ஈடுபடுவது என்பதற்கான திட்டத்தைத் தீட்டுவதற்காகக் கலந்து பேசவும், துணைச்செயலாளர் தோழர் மதியழகன் அவர்களுடன் இன்று நாகர்கோவில் புறப்படுகிறார்.

வழியில் திருச்சி, மதுரை மாவட்ட தி. மு. கழக முன்னணித் தோழர்களுடனும் பேச ஏற்பாடாகி இருக்கிறது. 30-ந் தேதி தோழர் மதியழகனும் அண்ணா அவர்களும் நாகர்கோவிலில் சொற்பொழிவாற்றுவார். தி. மு. கழகத் தோழர்களின் கலந்துரையாடல் ஆலோசனைக் கூட்டமும் நடைபெறும்.

நாஞ்சில் தி. மு. கழகத் தோழர்கள், அறப்போரில் ஈடுபடுவதோடு, திருச்சி, மதுரை மாவட்ட தி. மு. க. தோழர்கள் ஓர் தொண்டர்படை திரட்டி, அறப்போர்க்களம் செல்லும் ஏற்பாடு குறித்து ஆவன செய்யவும் இருக்கிறார்கள்.

அறப்போரில், தி. மு. கழகம் உரிய பங்கு செலுத்தும் கட்டம் வந்திருப்பதாகவே, தலைமைக் கழகம் கருதுகிறது.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 27—7—54 செவ்வாய்

யார் பொறுப்பாளி?

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில், எழுதப் படிக்கத் தெரியாத சாதாரண சிற்றூர் நகரிடமும் ஏற்பட்டுள்ள சீர்குலைவு மனோபாவத்திற்கு, முழு அளவில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் காங்கிரஸ் கட்சியினரே யாவர்: அவர்கள் தூவிய சீர்குலைவு மனோபாவத்தினால், நாட்டு மக்களுக்கு நன்மையும் ஏற்பட்டு இருக்கிறது; அதே அளவிற்குப் பரிகாரம் காண முடியாத நிலையில் தீமையும் விளைந்திருக்கிறது. அப்படி ஏற்பட்ட நன்மை யாது, கேடு எது என்ற ஆராய்ச்சி இப்பொழுது அவசியமில்லை.

ஆரிய வேத சாஸ்திர இதிகாச புராணங்கள், இந்த நாட்டு மக்களிடையே தாம் தாம் செய்ய வேண்டிய கடமையைத்தான் வலியுறுத்திக் கூறிவந்தனவே யல்லாது உரிமையைக் குறித்து எள்ளு மூக்கத்தனையும் வலியுறுத்தவில்லை. மேற்படி ஏடுகளில், உரிமை என்ற சொல்லே இடம் பெற்றிருக்கவில்லை என்பது உண்மைக்குப் புறம்பானதல்ல.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியில் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சிக்கிக் கொண்டதின் நேரடி பலனாக உரிமைக் குரல் இங்கு மெள்ள மெள்ள ஒலிக்கத் தொடங்கியது. ஆங்கிலக் கல்வி மூலம், மக்கள் பெற்ற உலகியல் அறிவு, உரிமையின் இன்றியமையாமை பற்றி சிலரை சிந்திக்கவும், சிலரை சிந்தித்தபடி செயலாற்ற முனையவும் தூண்டிற்று. இதன் பலனாக வேதம் கட்டளை, மனுவேடு போல் சரியத் தொடங்கியது. இருட்டறையில் சிறிய துவாரத்தின் வழியாக நல்ல காற்று வேகமாக நுழைந்து சென்று, இருண்ட ஆரிய கலாச்சார பண்பாட்டில், புனிதமான உலகியல் கலாச்சார ஒளி படரத் தொடங்கிற்று. கடமையே பெரிதெனக் கற்பிக்கப்பட்டு, கண்மூடித்தனமாக சமுதாய அடிமைத் தனத்தை, 'ஆண்டவன் அருளிய அமைப்பு' என நம்பிக் கிடந்த கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொண்ட மக்களிடம், உரிமைக் கனல் இடம் பெற்றது.

இப்புது மாற்றத்தை, காங்கிரஸ் கட்சியினர், அன்னிய ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல் துறையில் இந்தியத் துணைக்கண்டத்தை விடுதலை பெறச் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள முன் வந்தனர். அன்னியர் கூட்டுறவால் மக்களிடம் தோன்றிய உரிமைக் கனலை, அரசியல் விடுதலைக்கு மட்டுமே பயன்படுத்திக் கொண்டு, ஏனைத் துறைகளில் பயன்படுத்தி மாற்றம் காணத் தவறி விட்டனர் காங்கிரஸ் தலைவர்கள். மற்ற வாழ்க்கைத் துறைகளிலும், புகும் வாய்ப்பை, அவ்வுரிமைக் கனலுக்கு அளித்தால், தங்கள் ஆதிக்கம் பிடிசாம்பலாகி விடுமே என்ற சூட்சுமத்தை அறிந்து கொண்ட சில சாதுரியர்கள் காங்கிரசில் புகுந்து கொண்டு, அரசியல் விடுதலை பெற மட்டுமே, அக்கனலை அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் திருப்பி விட்டனர். இந்தச் சூதை பல காங்கிரஸ் தலைவர்கள் காணவே தவறி விட்டனர். வேறு சிலரோ, ஏகாதிபத்தியத்தை எதிர்க்க அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டுமே என்பதற்காக, இச்சூதை நன்கு தெரிந்து கொண்டிருந்தும் கூட, தெரியாதவர்போல், அலட்சியமாக இருந்து விட்டனர். அதுவுமல்லாமல், அதன் வன்மையை சரிவரத் தெரிந்து கொள்ளாததும், அவர்கள் காட்டிய அலட்சியத்திற்கு ஒரு காரணமாகும்.

அன்னியக் கூட்டுறவால் மக்கள் உள்ளங்களைப் பற்றிக் கொண்ட உரிமைக் கனல், அரசியல் துறையில் அன்னிய ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெளியேற்றப்பட்ட உடன் அணைந்துவிடும் — அல்லது தீவிரத்தில் தணிந்துவிடும் என மனப்பூர்வமாக நம்பினர் காங்கிரஸ் தலைவர்கள். அந்த நம்பிக்கையை வளர்த்துக் கொண்டும் வந்துவிட்டனர்.

அவர்கள் எதிர்பார்த்தபடி, வெள்ளையர் வெளியேறினதும், மக்களிடம் உருவான உரிமைக் கனல் மங்கிவிடவில்லை—மாறாக—புது விசையும் விரிவும் பெற்றுவிட்டது. காங்கிரஸ் ஆளவந்தார்கள், ஆந்தை விழிப்பதுபோல் விழிக்கின்றனர்.

முன்னால் போல், விடுதலை வீரர்களாக மட்டுமே காங்கிரஸ் தலைவர்கள் இருந்திருந்தால், மக்களின் உரிமைக் கனல் படர்ந்து வருவது கண்டு, அஞ்சமாட்டார்கள்; எதனையாவது கூட்டெரிக்க ஏவுவர்! அப்பணியில் சொந்த வற்றமும் காணுவர்! பூரிப்பும் கொள்வர்!

ஆனால் இன்றோ! அவர்கள் நாட்டின் ஆளவந்தார்களாக அரியாசனத்தில் அமர்ந்துள்ளனர்! அன்னிய ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு உரமும் ஊக்கமும் தந்த, மக்களுக்கு உண்டான உரிமை வேட்கை, தாங்கள் ஆளவந்தார்களாக அமர்ந்ததும், அடியோடு அழிந்துவிடும் எனத் தீர்மானித்துக் கொண்டிருந்தது, வெறும் பகற்கனவாக முடிந்தது. சேரகதையாகி விடவே அதனால் ஏற்பட்ட துக்கமும், ஏமாற்றமும், காங்கிரஸ் தலைவர்களிடை சினத்தையும் எரிச்சலையும் மூட்டியிருக்கின்றன, அவர்கள் ஆளவந்தார்களாகிப் பெற்றுள்ள படை பலம், அந்த சினத்தையும் எரிச்சலையும், அடக்குமுறையாக மாற்றிவிட்டிருக்கிறது. அதாவது உரிமை வேட்கைக் கொண்ட இள்ள மக்கள் மீது தாக்குதல் நடத்த, பெற்றுள்ள அதிகார பலம், தூண்டுதல் செய்கிறது!

எனவே, எதற்கெடுத்தாலும், மக்கள் மீது, தாக்கியும் தடியும் ஏவப்படுகின்றன, காங்கிரஸ் ஆளவந்தார்களால்! அந்தக் காலத்தில், அவர்கள் வேண்டுமென்றே செய்யக் கற்பித்ததற்கு, அவர்கள்தான் பொறுப்பாளிகள் ஆவர்! உரிமை கேட்கும் மக்கள் அதற்கு எந்தவகையிலும் பொறுப்பாளிகள் ஆகார்!

திபேத் வெள்ளம்; 1800 பேர் மரணம்

காளிம்போங், ஜூலை 25—

திபேத்தில் சயான்ட்சியின் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக 1,800 பேர் மரணமடைந்திருப்பர் என்று நம்பப்படுகிறது. மாண்டோர் எண்ணிக்கை இன்னும் அதிகமானதாக இருக்கலாம் என்று வேறு சில செய்திகள் கூறுகின்றன.

திபேத்தில் இந்திய வியாபாரப் பிரதிநிதியான வாசகிப் போப்பா டெசரிங் இந்த வெள்ளத்தில் மாண்டுபோனார். அவரது உடலை மீட்சிப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ரஷ்யாவின் மாபெரும் மாற்றங்கள்

சொற்பொழிவின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டது!

ரஷ்யா சென்று வந்த ஸ்ரீகண்டன் நாயர் தரும் தகவல்

கல்கத்தா, ஜூலை 24—

"ஸ்டாலின் காலத்திய ரஷ்யாவில் சமூக வாழ்வின் எல்லா அம்சங்களிலும் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாலங்கோவ் நிர்வாகப் பொறுப்பேற்ற பிறகு, கடும் கட்டுப்பாடுகள் ஓரளவிற்குத் தளர்த்தப்பட்டிருக்கின்றன,"

என்று, புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி செயலாளரும், மக்கள் சபை உறுப்பினருமான தோழர் ஸ்ரீகண்டன் நாயர் குறிப்பிட்டார். ஒன்றரை மாதங்கள் ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு, இப்போதுதான் இந்தியா திரும்பியுள்ள அவர் மேலும் கூறினார்:—

"இன்று குழம்பி இருக்கும் நிலையை, எதிர்காலத்தில் எந்தவகைய உருக்கொள்ளும் என்று முன்கூட்டியே கூற இயலாது. ஆனால், மனித உரிமைகள், சுதந்திரம் இவை பற்றிய நோக்கமும், கொள்கையும் மாறுவதற்கான நிலைகள் அங்கு ஏற்படுத்தப்பட்டுவிட்டன. இன்றோ நாளையோ, என்றாவது ஒரு நாள் அந்த மாற்றங்கள் நிச்சயமாக ஏற்படுவது தன்மைக்காகவே இருக்கும்."

தோழர் ஸ்ரீகண்டன் நாயர் மேலும் பேசுகையில், தான், கடந்த மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற சோவியத் தொழிற் சங்கங்களின் 11-வது காங்கிரசில் பேசுவதற்குத் தயாரித்து வைத்திருந்த சொற்பொழிவில் சோவியத் நாட்டின் அணு, நீர்வளிக் குண்டுகளின் பலம் பற்றிய பகுதியை நீக்கிவிட வேண்டும் என்று ரஷ்யர்கள் கூறியதாகவும் குறிப்பிட்டார்.

அகில இந்திய தொழிற் சங்க காங்கிரசின் சோதரப் பிரதிநிதியாக சோவியத் தொழிற் சங்க காங்கிரசில் கலந்துகொண்ட அவர், தமது சொற்பொழிவின் நீக்கப்பட்ட பகுதியையும் இங்கு குறிப்பிட்டார்.

"கொரியாவிலோ, இந்தோ—சீனாவிலோ அன்றி வேறு எந்த அரைக் காலனி நாடுகளிலோ, சுதந்திரத்திற்காகப் போரிட்டுக்கொண்டிருப்பவர்கள் மீது அமெரிக்கா அணு ஆயுதங்களை வீசுமானால் அதை எதிர்த்து முறியடிக்க சோவியத் ரஷ்யாவிடமும் அணு, நீர்வளிக் குண்டுகள் இருக்கின்றன என்ற உண்மைதான், அக்ரமிப்பு மனம் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஓரே வதிகளைப் பகையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்." இதுதான் தோழர் நாயரின் சொற்பொழிவில் வெட்டப்பட்ட பகுதியாகும்.

காரை காங். கட்சியினரின் பலாத்காரச் செயல்கள்!

நாகூர் மக்களின் அனுதாபம் பறிபோயிற்று!

நகர காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் கண்டனம்!

"தோழர் ராமசீனிவாசனும், அவரது தொண்டர்களும் அறப்போர் என்ற போர்வையில், பலாத்காரத்தையும், பயங்கர செயல்களையும் புரிகிறார்கள். காந்தியடிகளின் சத்தியாக்கிரக தத்துவம் புரியாத இவர்கள் அடி, உதை குத்து இவைகளை நடத்தி, நாகூர் பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாகியது குறித்து வருந்துகிறேன். இவர்கள் கையாளும் முறையானது பிரெஞ்சு சர்க்காரின் முறைகளுக்கு உகந்ததாக இருக்கும். அனுதாபத்தையும், ஆதரவையும் பெறுவதற்கு பதிலாக, வெறுப்பைத் தேடிக் கொள்ளுவதாக இருக்கிறது. எனவே, நாகூர் பொதுமக்கள் ஒரு அறப்போர் தொண்டர் படை அமைக்க முன்வர வேண்டும்."

—என்று, 21—7—54 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு, நாகூர் இலகர் சதுக்கத்தில், நகர காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சு இந்திய இணைப்புப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், தோழர் மா. குருமூர்த்தி செட்டியார் பி.ஏ., பி.எல்., குறிப்பிட்டார்.

பிரெஞ்சு இந்திய இணைப்பைக் கோரியும் தோழர் ராமசீனிவாசன் தலைமையில், திருமலைராயன் பட்டினம் தேசிய இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களால், காரை - நாகூர் எல்லையில் நடத்தப்படும் வரும் கள்ளக்கடத்தல் தடுப்பு பொருளாதார முற்றுகை ஆகிய நடவடிக்கைக் கொள்கைகளை ஆதரித்தும், அத்தொண்டர்களின் பலாத்கார வெறிச் செயல்களை பலமாக கண்டித்தும், தோழர்கள் முத்தையா பத்தர் (பிரெஞ்சு இந்திய அ.தி) சோமசுந்தரம் (தி. மு. கழகம்) சாமிநாதன் (கம்யூனிஸ்டு) மலாயா முருகையா, வி. டி. செப்பது காசிம் சாயபு (காங்கிரஸ்) ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் தோழர் ஆர். சிங்காரவேலு அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன:—

(1) பாண்டிச்சேரி வைச் சேர்ந்த இரு கம்யூன்களிலும், மாஹி, ஏனம் ஆகிய பகுதிகளிலும் அங்குள்ள மக்கள் பிரெஞ்சு ஆட்சியை வெளியேற்றிவிட்டு, இந்திய யூனியனுடன் இணைவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது குறித்து, இக்கூட்டம் தனது பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுவதுடன் அப்பிரதேசங்களை உடனடியாக இணைத்துக் கொள்ளும்படியும் மத்திய சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறது.

(2) பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளில், மக்களின் விருப்பத்திற்கு எதிராக தனது எதேச்சாதிகார ஆட்சியையும், அடக்குமுறை தர்பாரையும் நடத்திக் கொண்டு வருவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக வெளியேறும்படியும் பிரெஞ்சு சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறது.

(3) பிரெஞ்சு இந்திய எல்லைப்புறங்களில் திருமலைராயன் பட்டினம், தேசிய இளைஞர் காங்கிரஸ், காரை ஜவஹர் வாலிபர் சங்கம் ஆகியவைகளின் தொண்டர்கள் திரு. ராமசீனிவாசன் தலைமையில், பிரெஞ்சு இந்திய சர்க்கார்மீது நடத்திவரும் பொருளாதார முற்றுகைப் போரையும், கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளையும், கொள்கைகளில், இக்கூட்டம் ஆதரிக்கிறதெனினும் அவர்கள் கையாளும் முறைகள் பலாத்காரம், பயங்கரமானதும் அடாவடியதாகவும், காந்தீய கொள்கைகளுக்கு விரோதமானதாகவும், இந்திய தேசிய காங்கிரஸ் விதிகளுடன் முரண்பட்டதாகவும், இருப்பதால் அவர்களது நடைமுறைகளை இக்கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

(4) கள்ளக் கடத்தல்களையும், அதிலீடுபடுபவர்களையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன், கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளையும், பிரெஞ்சு சர்க்கார் மீது பொருளாதார முற்றுகைப் போரையும் நடத்தி, நாகூரில், தொண்டர் படை ஒன்று நிறுவுவதென்றும், அதற்கு முழு ஆதரவை அளிக்கும்படி பொது மக்களை கேட்டுக் கொள்ளுகிறது.

தலைவர் முடிவுரைக்குப் பின், கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவெய்தியது.

முதல் கூட்டம்

புதுடில்லி, ஜூலை 24—

இந்தோ சீனப் போர் நிறுத்த மேற்பார்வைக் கமிஷனின் முதல் கூட்டம் புதுடில்லியில் ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று நடைபெறும் என்று தெரிகிறது.

தமிழகமெங்கும் மும்முனைப் போர் வெற்றி முழக்க விழா

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ல், திராவிடமெங்கும் மும்முனைப் போர் முழக்க நாள் விழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கொடியேற்று விழாவும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் விமரிசையாக நடைபெற்றுள்ளன. கூட்டங்களில் தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு தரக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறி இருக்கின்றன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித்தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க் களத்தில் அடக்குமுறைக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன். அன்றைய நிகழ்ச்சிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது :—

சென்னை (2-வது வட்டம்)

15—7—54 அன்று கழகப் பணி மனையில் மும்முனை போராட்ட வெற்றி விழா கூட்டம் நடைபெற்றது. தோழர் கா. த. தி. அரசு தலைமை வகித்தார். தோழர் சுந்தரமூர்த்தி கழக கொடியை ஏற்றி வைத்தார். போராட்ட நிலைமையை விளக்கி டலர் பேசினர்.

★

சென்னை (39வது வட்டம்)

39 வது வட்ட தி. மு. கழகக் கிளையின் மும்முனைப் போராட்ட பாராட்டுக் கூட்டம் 18—7—54 ஞாயிறு மாலை 4-மணிக்கு தோழர் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப. கலைஞன், சோன், நாராயணன், கா. வேங்கட வேந்தன், மா. சே. முச்முகில், மா. சேத. மூர்த்தி, வா. பாண்டியன், மா. மோகன் ஆகியோர் பேசினர்.

★

சென்னை (17வது வட்டம்)

18—7—54 ஞாயிறு காலை 10 மணியளவில் தோழர் சீனிவாசன் தலைமையில் ஜூலை 15-நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் இராச இரத்தினம், சீனிவாசன், இமயவரம்பன் முதலியோர் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேறின.

★

சென்னை (26-வது வட்டம்)

18—7—54 மாலை 6 மணியளவில் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சுப்பையன் தலைமையில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா கொண்டாடப்பட்டது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

★

சென்னை (5வது வட்டம்)

15—7—54ல் தி. மு. கழகக் கட்டிடத்தை நன்கு அலங்கரிக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது.

★

சென்னை (35வது வட்டம்)

18—7—54 ஞாயிறு மாலை 6 மணியளவில் தோழர் அ. ச. இளவழகனார் தலைமையில் மும்முனை போராட்ட வெற்றிவிழா நடைபெற்றது. தோழர்கள் சா. கணேசன், அ. சே. கதுரைக்கண்ணு, அருட்சிவர்மன், தாணி, கோ. கிருட்டிணமூர்த்தி ஆகியோர் பேசினர்.

★

கலையம்புத்தூர்

18—7—54ல் தி. மு. கழகச் சார்பில் தோழர் கே. கே. தம்பி தலைமையில் மும்முனைப் போர் முழக்க நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பழனி அ. தமிழரசு, மதுரை மு. வசனப்பித்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கல்வித் திட்டத்தைக் கைவிட்டதற்காக காமராசரைப் பாராட்டியும், தூத்துக்குடி சதிவழக்கை வாபஸ் பெறும்படியும், கல்லக்குடியை சட்டபூர்வமாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை (33வது வட்டம்)

18—7—54 ஞாயிறு காலை 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடந்தேறியது. அதுபோது, மும்முனைப் போராட்ட வெற்றி விழா குறித்து பல தோழர்கள் பேசினர். பின்னர் கிளைக் கழகத்தில் குறள் வகுப்பு நடத்த தீர்மானித்த பிறகு கூட்டம் முடிவுற்றது.

★

குமாரம்

15—7—54ல், சவுந்தரபாண்டியனூர் படிப்பகத்தில், தி. மு. கழகத் தோழர்களால் மும்முனைப் போர் முழக்க நாள் கொண்டாடப்பட்டது. தோழர் கே. வி. கருப்பையா கழகக் கொடியை ஏற்றிவைத்தார். மாலையில் நடைபெற்ற கூட்டத்திற்கு எஸ். சௌந்தியன் தலைமையில் தோழர்கள் எஸ். பி. ரத்தினம், எம். பாண்டியன், கே. வி. கருப்பையா முதலியோர் வெற்றி விழா பற்றி பேசினர்.

★

பா. நா. புதூர்

16—7—54ல் தி. மு. கழகக் கிளையின் சார்பாக தோழர் மதிவாணன் தலைமையில் மும்முனைப் போர் முழக்க நாள் கூட்டம் மாலை 7-30க்கு நடைபெற்றது. அதுபோது தோழர்கள் புரட்சிநேசன், குணசேகரன், குன்றநாதன், சேரலாதன், இளங்கோ ஆகியோர் பேசினர்.

★

நாகூர்

15—7—54ல் தி. மு. கழகக் கட்டிடத்தில் மும்முனை போர் முழக்க வெற்றி விழாவை முன்னிட்டு காலை 8 மணியளவில் கழகக் கொடியை செயலாளர் தோழர் எஸ். வி. பாபு ஏற்றி வைத்தார்.

★

அருப்புக்கோட்டை

15—7—54ல் நகரில் பல இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டது. இரவு 7 மணிக்கு தியாகராயர் சங்கத்தின் முன்பாக தோழர் சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் தோழர்கள் எம். இராமசாமி, சு. காளிமுத்து, சோ. முத்துராமலிங்க சேதுபிச்சைமுத்து, சு. நடராசன் ஆகியோர் பேசினர்.

★

உலிபுரம் :

15—7—54ல், உலிபுரம் தி. மு. கழக சார்பில் மும்முனைப் போர் நினைவுநாள் விழாக் கொண்டாடப்பட்டது. முக்கிய இடமான சாவடி மைதானம் கழகக் கொடிகளாலான தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது.

மாலை 4-30 மணியளவில் பள்ளி மாணவர்களும், கழகத் தோழர்களும், கழகக் கட்டிடத்திலிருந்து சாவடி மைதானத்திலுள்ள கழகக் கொடி மரத்தை வந்தடைந்தனர். தோழர் இல. இராமசாமி கொடி ஏற்றினார். தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் திரு. ப. ர. வீராசாமியால் மிட்டாய் வழங்கப்பட்டது.

★

தொளார்

15—7—54 மாலை 6 மணிக்கு கழகப்பணிமனையிலிருந்து செங்கமேடு தோழர் ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு வ. உ. சி. திடலில் வந்தடைந்தது, விருத்தாசலம் வட்டக் கழகச் செயலாளர் செங்கமேடு தோழர் பிச்சமுத்து அவர்களால் கொடி ஏற்றப்பட்டது. கழக பணிமனையில் சிறை சென்ற தோழர் தங்கமணி தலைமையில் மும்முனைப் போர் முழக்க நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆறுமுகம், வே. கோவிந்தசாமி, தொ. பிச்சமுத்து ஆகியோர் பேசினர்.

★

திண்டுக்கல்

18—7—54ல், நகர தி. மு. கழக ஆதரவில், மும்முனைப் போராட்ட முழக்க நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி கொடியேற்றிவைத்தார். மாலை 7-30 மணிக்கு வ. உ. சி. திடலில், தோழர் இளங்கண்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. வி. கே. சாமி, பி. சமதர்மம் பேசினர்.

★

மூங்கில்பாடி (பேரம்பலூர்)

15—7—54 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் வடிவேலு தலைமையில் "மும்முனைப் போர் வெற்றி விழா" நடைபெற்றது. தோழர்கள் கோ. சிவப்பெருமாள், டி. கே. திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

கண்டமங்கலம்

18—7—54-ல் தி. மு. கழக சார்பில் மும்முனைப் போராட்ட வெற்றி விழா தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முருகையன், சிவபெருமாள், கருப்பையா ஆகியோர் பேசினர்.

★

வேலூர் (சேலம்)

15—7—54 அன்று இவ்வூரின் முக்கிய இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

★

நன்னியூர்

15—7—54 அன்று இரவு தி. மு. கழகச் செயலாளர் முன்னிலையில் மும்முனைப் போராட்ட விழா நடைபெற்றது.

★

பழனி

17—7—54-ல், மாலை தேரடி மைதானத்தில் நடைபெற்ற மும்முனைப் போராட்ட வெற்றி விழா கூட்டத்தில், தோழர் வெ. தியாகராசன் தலைமையில் தோழர்கள் மதுரை எஸ். முத்து, மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசினர்.

★

சேலூர்

15—7—54 காலை சேலூர் தி. மு. கழகக் கட்டிடத்தில் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு தோழர் கே. எம். சாரங்கபாணி அவர்கள் தலைமையில் கொடியேற்றி வைக்கப்பட்டது. மாலை 6-மணிக்குத் தோழர் எம். பி. சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. தோழர் வி. துரைசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஏ. கே. குமாரவேல், வி. இ. செயராமன், எஸ். ஏ. கைலாசம் ஆகியோர் பேசினர்.

கம்யூனிஸ்டு கட்சியினரின் போக்கு!

—(:)—

திருச்சியில் திராவிட இயக்கத்தினர் மீது வசைமாரி!

பொதுமக்கள் எதிர்ப்பினால் கூட்டங்கள் குழப்பத்தில் முடிவடைந்தன!

பொன்மலை, ஜூலை 26—

21—7—54 புதன் மாலை 7 மணிக்கு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பொன்மலைப் பட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் 'குடியாத்தம் தேர்தலும்-திராவிட இயக்கமும்' என்ற தலைப்பில் தோழர் எம். கல்யாணசுந்தரம் பேசினார். திராவிட இயக்கத்தைத் தாக்கிப் பேசிய அவர்—அண்ணாதுரையும், காமராசரும் சந்தித்துப் பேசிய ரகசியம் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், காமராசர் அண்ணாதுரையிடம், "குடியாத்தம் தேர்தலில் தனக்கு ஆதரவு தர வேண்டும்; அதோடு கம்யூனிஸ்டு கட்சியை ஒழித்துக்கட்ட வேண்டும்; இல்லையேல் அண்ணாதுரையும், அவரைச் சார்ந்தவர்களும் வேலூர் சிறைக்குச் செல்ல வேண்டி வரும்" என்று, துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாகவும் அதற்கு அஞ்சியே அவர்கள் கம்யூனிஸ்டுகளை எதிர்க்கின்றனர் என்றும், இதையாராவது மறுக்க முடியுமா—என்றும் சவால் விடுத்தார். உடனே தோழர் மாரங்குசம் மேடைக்குச் சென்று, தோழர் கல்யாணசுந்தரத்திடம், தான் இதனை மறுப்பதாகவும், தாங்கள் இதனை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா? என்றும் கேட்டார்.

தோழர் கல்யாணசுந்தரம், "இதை என்ன நிரூபிக்க வேண்டியிருக்கிறது? அதன் ரகசியம் எனக்குத் தெரியும்; வேண்டுமானால் தாங்கள் வேறு கூட்டம் போட்டு மறுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

உடனே பொது மக்கள் மேடையை நோக்கி வந்து 'கல்யாணசுந்தரம் கூறியவற்றை வாபஸ் வாங்க வேண்டு'மென கோஷமிட்டனர். இந்த நிலையில் கூட்டத்தில் ஒரே குழப்பம் ஏற்பட்டது. தோழர் மாரங்குசம் மேடை மீதேறி எல்லோரும் அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டபின் பேரில் அமைதி ஏற்பட்டது.

திருச்சி, ஜூலை 26—

22-7-54 மாலை 6 மணிக்கு திருச்சி குருவிபான்குறு மைதானத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் கூட்டம் தோழர் ஏ. என். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. குடியாத்தம் உப தேர்தல் பற்றி தோழர் எம். கல்யாணசுந்தரம், எம்.எல்.ஏ., பேசினார், தொடர்ந்து அவர் பேசுகையில், மத்திய சர்க்கார், பிரதம மந்திரி நேருவிடமிருந்து சென்னை சர்க்காருக்கு ஒரு சர்க்குலர் வந்திருக்கிறதென்றும், அதில் திராவிடர் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அடக்கி ஒடுக்க வேண்டுமென்றும், அவைகள் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவு தந்தால் சட்ட விரோத கட்சிகளென தடை செய்ய வேண்டுமென்றும் எழுதியிருக்கிறதை தான் பார்த்ததாகவும் அதற்கு பயந்து கொண்டுதான் திராவிடர் இயக்கம் கம்யூனிஸ்டுகளை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறது என்றும், அதே சமயத்தில் காங்கிரசையும் ஆதரிக்கிறது என்றும் கூறினார்.

கூட்டத்திலிருந்த பொதுமக்கள், இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்டு மேடைக்குச் சென்றனர். அவர்களை சிலர் தடுக்க ஆரம்பித்தனர். உடனே அடிதடி ஏற்பட்டு முக்கால் மணி நேரம் கூட்டம் நடத்த முடியாமல் போய்விட்டது.

பின்னர் தோழர் கல்யாணசுந்தரம் தொடர்ந்து நேரம் போதும் பொறுப்பற்ற முறையில் பேசினார். பொதுமக்களில் சிலர் கேட்ட கேள்விக்கு அவரால் பதில் கூற முடியாது போகவே கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்று தெரிகிறது.

ஐரோப்பிய பாதுகாப்பிற்கு ஐரோப்பிய நாடுகள் மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்ற ருஷ்யாவின் யோசனையை அமெரிக்கா நிராகரிக்கும் என்று தெரிகிறது.

'அரசியல் புலி'களுக்கும் ஆதாரக் கல்வி!

அசாம் சட்டசபையில் தேசியத் தோழர் சிபார்சு!

ஷில்லாங், ஜூலை 24—

அசாம் ராஜ்ய சட்டசபையில், ஆதாரக் கல்வி பற்றிய விசாரணைக் குழுவின் அறிக்கையொன்றைப் பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களிலொருவரான தல்பிர் சிங் லோகார் என்பவர், 'அசாம் சட்டசபை உறுப்பினர்களுக்கும், பொறுப்புடையதான ஆதாரக் கல்வி அளிப்பதற்கான பயிற்சி நிலையம் ஒன்றை சட்டசபைக் கட்டிடத்திற்குள்ளாகவே நிறுவப்பட வேண்டும்' என்று, பலத்த சிரிப்பொலிக்கிடையே குறிப்பிட்டார்.

அதன்படி ஏற்படுத்தப்படும் பயிற்சி நிலையத்தில், எல்லா சட்டசபை உறுப்பினர்களும் கட்டாயமாகப் பயிற்சி பெற வேண்டுமென்றும், நான் தவறாமல் பயிற்சியை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்தப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கான முறைகளை பிரதம மந்திரி கவனிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தோழர் தல்பிர் சிங் மேலும் பேசுகையில், சட்டசபை நடவடிக்கைகளில், ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்களே 'பெரிய புள்ளி'களாக மதிக்கப்படுகின்றனர் என்பதை வருத்தத்துடன் குறிப்பிட்டு, இந்த 'அபிமான அந்தஸ்து' ஒழியும் காலம் விரைவில் வரும் என்று சொன்னார்.

கொரியாவில் சமாதானம் ஏற்பட சமைமான வழி எதுவென்றால், கொரியாவிலிருந்து கம்யூனிஸ்டு துருப்புகளை வாபஸ் வாங்குவதாகுமென்று சிங்மென் ரீ கூறினார்.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் அளிக்கும் கருத்துரை

கிளர்ச்சிக்குப் பேராதரவு

ஏசிப் பேசுவோருக்கு இடித்துரை

கவர்னரின் சம்பளம் கட்டாயம் குறைக்கப்பட்டாக வேண்டும்—இதற்கான கிளர்ச்சி நடத்தத்தான் வேண்டும் என்று கருத்துரை அளித்துள்ளனர், கண்ணியமிக்க தோழர்கள் பலர்; சில வெளியிடப்பட்டுள்ளன. ஏசிப் பேசுவோரின் வீண் வாதங்கள், வெறும் தூசு என்று கூறி, வரட்டுப் பேச்சினால் குதூட்டறிவைக் காட்டிக் கொள்ளுவோரின் போக்கு பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை, என்று பல நண்பர்கள் கடிதமூலம் தெரிவித்துள்ளனர்; மகிழ்ச்சி நன்றி.

(ஆசிரியர்)

அன்புள்ள, ஆசிரியருக்கு!

நமக்கெல்லாம் இனப் பற்றும், பகுத்தறிவும் உணர்ச்சியையும் ஊட்டிய தந்தை பெரியார் ஈ. வே. ரா.வைத் தந்த ஈரோட்டில் நமது அண்ணா அவர்கள் "கவர்னரின் சம்பளம் பற்றியும், அதுபற்றி தி. மு. கழகம் போராட வேண்டியதின் அவசியம்பற்றியும் அடித்துக் கூறியுள்ளார் நல்ல கருத்துக்களை உள்ளடக்கியதாக.

நாம் எந்தநிலைதான் எடுத்துக் கூறினாலும் இது இடக்கிறது. எதுவும்—இம்மைகள் என்றுதான் அரசாங்கம் மதில் சொல்லுமே தவிர கவர்னரின் சம்பளக் குறைவு பற்றி சிறிதளவும் அக்கறை காட்டாது, "ஒரு தனி மனிதனுக்கு ஏன் 9,93,000 ரூபாய் சம்பளம் என்பதைக் கூட எண்ணிப் பார்க்காத அரசாங்கத்திற்கு போராட்டம் மூலம் தான் புத்தி கற்பிக்க வேண்டும்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தூண் கவர்னர் ஸ்ரீ பிரகாசாவிற்கு மக்களின் வரிப் பணத்தில் ஒரு ஆண்டிற்கு ரூ. 9,93,000 செலவிடப்படுகிறது வேதனை தரும் இந்த கவர்னர் சம்பளத்தைக் குறைக்க ஒரு போராட்டம் அவசியம் தேவை, அதுவும் நமது அண்ணா தலைமையில் அந்தப் போராட்டம் அமைந்தால், ஆணவபுரியாம் புதுடெல்லி, அஞ்சும், நடுங்கும்.

நிக்கம் ஏற்பட்டால் சம்பளம் குறையும். நமது நாடு நமக்கே ஆக எதிர்காலத்தில் நடைபெறும் பெரும் போராட்டத்திற்கு, இதுவும் இந்த மாதிரி ஒரு போராட்டமும் உடனடியாக தேவை

எனவே, போர்! போர்!! போர்!!!

நா. திருமலிங்கம்,
முத்துப்பேட்டை,
22—7—54

அன்புள்ள ஆசிரியருக்கு,

சென்னை கவர்னருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் அதிகம், அதைக் குறைக்க வேண்டும் என்ற கருத்தை நான் வரவேற்கிறேன், அதற்காக நடைபெறும் போராட்டத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்ளத் தயார்! ஒரு அடிமைப்பட்ட நாடு, விடுதலை உணர்ச்சிகொண்டு எழும் போது, அது நடத்தும் கிளர்ச்சிகள், சட்ட திட்டத்திற்கு உடன்பாடு உள்ளதா இல்லையா என்று பார்ப்பது மிகவும் மட்டரகமான கோழைத்தனமாகும்! எந்த நாட்டு விடுதலைப் போராட்டத் தலைவர்களும் சொல்லாத, சொல்லக்கூசும், கோழைத்தனமான வார்த்தைகளாகும். கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் நடத்த வேண்டுமென்ற நம் பொதுச் செயலாளரின் யோசனை, மிகச் சிறந்தது. இதிலே நாம் கவனிக்க வேண்டியது 'இது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா? இல்லையா? என்பதல்ல!' இந்தக் காரியம் தேவையானதா? இல்லையா என்பதேயாகும்.

இந்த நாட்டிலே எந்தவிதமான வேலையுமில்லாமல் இருந்தும், கேளிக்கையும் நடத்திக்கொண்டிருக்க ஒரு கவர்னர்! அவருக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான வரிப்பணம் சம்பளம் என்ற பெயரால்! இது நம் நாட்டிற்கு இழைக்கப்படும் கொடுமை! இதை மாற்றி அமைத்தேயாக வேண்டும். இது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்பது கோழை வாதமாகும்! இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானால், தனி நாடு கோரிக்கை கூட விரோதமாகும்! இத்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சட்ட விரோதமாகும்! உடனடியாக போராட்டம் ஆரம்பிக்க வேண்டும்.

குறைக்கப்படும் கவர்னர் சம்பளத்தையும் மத்திய சர்க்காரே கொடுக்கவேண்டும்!

மேலும் இப்போராட்டத்தில், தென்னாடு காமராசர் ஆட்சியின் உண்மை நிறத்தையும் விளக்குவதாயும் உள்ளது. திராவிட நாட்டுப் பிரிவினை இலட்சியமாகக் கொண்ட நாம், அந்த ஆட்சியிலேயே கிளர்ச்சியினை அமைத்துக் கொண்டு போவது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த முடிவை வெளியிட்ட பொதுச் செயலாளரின் எண்ணத்திற்கு, வீர உள்ளத்திற்கு நான் தலைவணங்குகிறேன்.

கோழைகள் விலகட்டும்! வீரர்கள் பின்தொடர, போராடுவோம்!

பி. கிட்டு,
கரூர், 22—7—54.

முன்னாள் பர்மிய அமைச்சருக்கு

ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை

பர்மாவின் முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த ... மைன்ட், ஊம்பா ... இலாகாவின் முன்னாள் செயலாளர் ... மீது ... ஆகிய குற்றங்கள் மீது விசாரணை நடைபெற்றதாம்.

இருவருக்கும் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

... ஒழுக்க மீறி ... வழங்கினர் ...

... மைன்ட் ... பதவியிலிருந்து ... செய்ப்பட்டதும் ... ஒரு வழக்கு ... தொடுக்கப்பட்டது ...

★

ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னை கவர்னரின் சம்பளச் செலவு 9,93,000 ரூபாயாக இருந்து வருகிறது. இது எப்படித் தவறானது என்பதைக் கவனிக்குமுன்பு இது சரியானதுதான் என்கிற வாதம் ஒன்றிருக்கின்றதல்லவா? அதைக் கவனிப்போம்:

'நமது நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே இப்பெருந்தொகையை சம்பளச் செலவாக அளிக்கப்படுகிறது' என்பதுதான் ஆதரிப்போரின் வாதம்.

இது தவிர கவர்னராக இருக்கும் அந்தத் தனி மனிதருக்கோ, அன்றி அவர்தம் குடும்பத்தார் முழுமைக்குமோ இவ்வளவு பணமும் தேவைப்படுகிறதென்பதற்காக கொடுக்க வேண்டும் என்று இதுவரை எவரும் வாதிட்டதாகக் காணோம். வாதிடவும் முடியாது. இப்பிரச்சினையின் ஒரு நாட்டின் கௌரவம் கவர்னருக்கு அளவுக்கதிகமான சம்பளச் செலவு அளிப்பதன் மூலம் காக்கப்படும் என்கிற வாதம் ஏழ்மை நிறை நாட்டில் வாழ்கிறோம் என்ற உணர்வு பெறுமளவு முதலாளித்துவ மனோபாவத்தோடு சொல்லப்படுகிறது என்பதை மெய்ப்பிக்க ஆராய்ச்சியோ, விவாதமோ தேவையாக இல்லை.

வாதத்திற்காகவே அவ்வாதத்தை ஏற்றுக் கொண்டதாக வைத்துக்கொண்டாலும் உண்மை அதற்கும் புறம்பாகவே இருப்பதை எண்பிக்க முடியும். எவ்வாறென்றால், கவர்னரின் தேவைக்காக அத்தொகை அளிக்கப்படவில்லை. மாறாக, நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றவே அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கவர்னர் இப்பெருந்தொகையை எடுத்துக் கொள்வதன் மூலம் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிவிட்டு பிறகு அத்தொகையை அரசாங்கத்திற்கே திரும்பி கொடையாக அளித்துவிட்டால் நாட்டின் கௌரவம் மேலும் உயர்ந்து படுவதோடு கவர்னரின் கௌரவமும் காற்றில் பறக்காமல் இருக்குமல்லவா? இதைச் செய்யாமலிருப்பது ஏன்? நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றத்தான் என்பது உண்மையாக இருந்தால் ஏன் இதைச் செய்யார்கள்? எனவே, கௌரவத்தைக் காப்பாற்ற என்கிற வாதம் பொய்மையை அடிப்படையாகக் கொண்ட பலவீனமான வாதமாகும்.

இனி இப்பெருந் தொகைச் சம்பளச் செலவு எப்படித் தவறானது என்பதைக் கவனிப்போம்.

கவர்னரின் இன்றைய சம்பளச் செலவு ஆடம்பரம், முதலாளித்துவ மனோபாவம், நாட்டின் நலன் கவனியாமை ஏழ்மையைப் புறக்கணித்தல் முதலியவைகளின் சின்னம் என்பதற்கு விளக்கம் தேவையில்லை எனினும், இந்நாட்டில் வாழும் மக்கள் சாகாமலிருக்கவே போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்பமாக வாழ்வதற்கு அல்ல.

டி. பி. மூர்த்தி

★

ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

சமீபத்தில், ஈரோட்டில் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள், "இன்னும் ஆறு மாதத்தில் சென்னை கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்பட வேண்டும், இல்லையேல் அதற்கான கிளர்ச்சியும், போராட்டமும் தி. மு. கழகம் துவக்க வேண்டி வரக்கூடும்" என்று கூறியுள்ளார்கள்.

'கவர்னர் பதவி' அலங்காரமும், ஆடம்பரமும் உடைய தோடு அல்லாமல், ஜனநாயகத்திற்கே ஊறு செய்யும் பதவியாகும். உதாரணமாக,

(i) ஜனநாயக முறைப்படி தேர்தலில் நிற்காத ஆச்சாரியார், அரசோச்ச வழி கோலிய பதவியாகும் அந்த கவர்னர் பதவி.

(ii) மக்களை மதியாதவர்களும், மக்களால் தோற்கடிக்கப்பட்ட பக்தவத்சலம் போன்றவர்களும், அமைச்சரவையில் அங்கம் வகிக்க அணை நின்ற பதவியாகும் கவர்னர் பதவி.

(iii) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் உள்ள சட்டசபையையே கலைக்கக்கூடிய அதிகாரம் படைத்த பதவியாகும் அந்த கவர்னர் பதவி.

ஜனநாயகத்தை கொலை செய்யக்கூடிய, இவ்வாறு எல்லை இல்லா அதிகாரம் படைத்த அந்த கவர்னர் பதவி வகிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் சம்பளமாகவும், அலவன்சாகவும் கொடுக்கப்படுகிறது என்பதை எண்ணும்போது, ஏழையின் வரிப்பணம் எங்கேபோய் செல்கிறது என்று தான் எண்ணவேண்டியுள்ளது.

10 இலட்சம் ரூபாய் இந்நாட்டிற்கு எந்தவிதத்திலும் பயன்படவில்லை. நாட்டிலே பசி நோய் பரவுகிறது—காலரா நோயைவிட கடுமையாக; பொருளாதார நெருக்கடி வேறு போட்டிபோடுகிறது; மக்களிடம் வாங்கும் சக்தி மிகமிகக் குறைந்து வருகிறது; வேலையில்லாத் திண்டாட்டம் வேறு இத்துடன் கூட்டணி அமைத்துக்கொள்கிறது; இது நாட்டின் நிலை. ஆனால், கவர்னர் பதவிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 லட்சம் என்று எண்ணும்போது இதயம் கலங்குகிறது.

ஆகையால் கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் "ஆளும் கட்சியினரே சட்டத்தைத் திருத்தி, சம்பளத்தைக் குறைப்பார்" என்று எண்ண ஏது எதுவும் இடையாது; காரணம் கடந்த கால நிகழ்ச்சிகளே சான்றாகும்.

ஆகலான், அண்ணா கூறியதுபோல போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை; சட்ட புத்தகங்களில் சட்டம் இல்லையே என்பதோ, சட்டம் இடம் தருமா என்பதோ 'அறிவுடைமையர்' செயல் ஆகாது.

—கோ. சி. நடராசன்
முத்துப்பேட்டை

சொற் பயிற்சிக் கூட்டம்

★

28—7—54 மாலை 6 மணிக்கு சென்னை தி. மு. க. 5-வது வட்டக் கிளைக் கழக மாடியில் தோழர் ஆர். வேணுகோபால் தலைமையில் 'உரிமை' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், த. பார்த்திபன், இராமதாஸ், இராசசேகரன், ச. இரத்தினம் ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் நினைவு நாள்

★

28—7—54 மாலை 5½ மணிக்கு சென்னை, ரூயப்பேட்டை, பட்டாளம்மன் கோவில் தெருவில் கொண்டாடப்படும். தோழர்கள் க. அன்பழகன், கண்ணன், மு. பழனி, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

* * *

திருக்குறள் வாரம்

★

28—7—54 முதல் 31-7-54 வரை மாலை 6 மணிக்கு சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்

28—7—54: தோழியர் அ. ரு. காமாட்சி அம்மையார் தலைமையில் தோழர் வை சுப்ரமணியம் பேசுவார்.

29—7—54: தோழர் இ. வை. சொக்கப்பா தலைமையில் தோழர் ப. நீலகண்டன் பேசுவார்.

30—7—54: தோழர் க. நடேச உடையார் தலைமையில் தோழர் ரா. சித்தன் பேசுவார்.

31—7—54: தோழர் ஞா. தேவநேயப்பாவாணர் தலைமையில் தோழர் வீ. உலக ஊழியர் பேசுவார்.

திருச்சி—கொச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ்வறப்போரில் தாம் முன்னின்று நடத்துவதாகவும், தமது ஊழியர்கள் இதற்கு ஒத்துழைப்பார்கள்' என்றார். 'இதில் மேலிடத் தாக்கீது எவ்வாறிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து போராட்டத்தை நடத்த வேண்டும். பிரதேசக் காங்கிரஸ் அந்தஸ்து தந்தாலும் இன்னும் வேறு பல சலுகைகள் தந்தாலும் அதையெல்லாம் வேண்டாது முடிவு வெற்றி வரை போராடவேண்டும். அதற்காக அத்தனை கட்சிகளினுடையவும் ஒத்துழைப்பைப் பெற தி. த. நா. கா. முனைய வேண்டும்.

'ஆகவே, ஆர்வத்தால் உந்தித் தள்ளப்பட்ட நமது இயக்கத் தோழர்களும் அறப்போரில் ஈடுபடுவதற்காக "அறிவக"த்தை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதற்காவன உடனடி செய்ய வேண்டுகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டுப் பதிப்பித்து (இ., ஆலை நாயகன் செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.